**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க..எண். 1459/மாஒ2/ஒபக/2022, நாள். 2[illegible].12.2022**

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – கல்வி சாரா செயல்பாடுகள் – 2022–2023 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் "கலைத் திருவிழா போட்டிகள்" – மாநில அளவிலான போட்டிகள் நடைபெறுதல் – மாவட்ட அளவில் வெற்றி பெற்ற முதல் இடம் பிடித்த மாணவர்களை உரிய பொறுப்பு ஆசிரியர் துணையுடன் பங்கேற்கச் செய்தல் – சார்பாக.

பார்வை : 1. 2022–2023 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.

2. சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3195/ஆ7/கலை/ஒபக/2022, நாள். 22.12.2022.

*********

2022–2023 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் "மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடத்தப்படும்". தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாகவும், பள்ளிக் கல்வி செயல்பாடுகளின் ஒரு பகுதியாக கலை பண்பாட்டு கொண்டாட்டங்களை ஒருங்கிணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கலை சார்ந்த பயிற்சிகளும், 6 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கலைத் திருவிழா போட்டிகள் பள்ளி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் நடத்தி முடிக்கப்பட்டு தற்போது 27.12.2022 முதல் 30.12.2022 வரை மாநில அளவில் கீழ்கண்டவாறு நடைபெறவுள்ள போட்டிகளில் மாவட்ட அளவில் முதல் இடத்தில் வெற்றி பெற்ற மாணவர்களை உரிய பொறுப்பு ஆசிரியர் துணையுடன் பங்கேற்கச் செய்யுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | கலைத் திருவிழா மாநில அளவிலான போட்டிகள் நடைபெறும் இடம் | வகுப்பு | போட்டிகள் விவரம் | கலந்து கொள்ள வேண்டிய மாணவர்கள் விவரம் |
|---|---|---|---|---|
| 1 | மதுரை | 6 – 8 | அனைத்து வகைப் போட்டிகள் | மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இடம் பிடித்த மாணவர்கள் உரிய பொறுப்பு ஆசிரியர் துணையுடன் |
| 2 | கோயம்பத்தூர் | 9 – 10 | அனைத்து வகைப் போட்டிகள் | |
| 3 | திருவள்ளூர் | 11–12 | வகை 1. காண்கலை/நுண்கலை<br>வகை 8. நாடகம்<br>வகை 9. மொழித்திறன் | |

த.பி.பா...

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | காஞ்சிபுரம் | 11–12 | வகை 2. இசை–வாய்ப்பாட்டு<br>வகை 3. கருவி இசை–தோற்கருவி<br>வகை 4. கருவி இசை– துளை / காற்றுக் கருவி<br>வகை 5. கருவி இசை–தந்திக்கருவி<br>வகை 6. இசைச் சங்கமம் | மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் இடம் பிடித்த மாணவர்கள் உரிய பொறுப்பு ஆசிரியர் துணையுடன் |
| 5 | செங்கல்பட்டு | 11–12 | வகை 7. நடனம் | |

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

22/12/22

இணைப்பு –
1. பார்வையில் காண் செயல்முறைகள்
2. மதுரை நிகழ்ச்சிகள்
3. கோயம்பத்தூர் நிகழ்ச்சிகள்
4. திருவள்ளூர் நிகழ்ச்சிகள்
5. காஞ்சிபுரம் நிகழ்ச்சிகள்
6. செங்கல்பட்டு நிகழ்ச்சிகள்

**பெறுநர் –**
அனைத்து அரசு நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம். (உரிய வழியாக)

**நகல் –** 1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடை நிலை), வேலூர்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), வேலூர்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.

**நகல் –** மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல் –** முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.